மாநிலத் தேர்தல் ஆணையம்
எண்.**39,** இரண்டாவது குறுக்குத் தெரு**,** பீட்டர் நகர்,
புதுச்சேரி
*******

புதுச்சேரி, 03/12/2012

## <u>செய்தி குறிப்பு</u>

சென்னை உயர்நீதி மன்ற உத்தரவின்படி, மாநில தேர்தல் ஆணையம் புதவை யூனியன் பிரதேசத்தில் உள்ள புதுச்சேரி, உழவர்கரை, காரைக்கால், மாஹி மற்றும் ஏனாம் ஆகிய 5 நகராட்சிகளில் உள்ள 5 நகரசபை தலைவர் தேர்தல் மற்றும் 122 வார்டுகளிலிருந்து நகரசபை உறுப்பினர் (கவுன்சிலர்) தேர்தல் மற்றும் அரியாங்குப்பம், பாகூர், மண்ணாடிப்பட்டு, நெட்டப்பாக்கம், வில்லியனூர், கோட்டுச்சேரி, நெடுங்காடு, நிரவி, திருமலைராயன்பட்டினம் மற்றும் திருநள்ளாறு ஆகிய 10 கொம்யூன் பஞ்சாயத்துகளில் உள்ள 98 கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர் தேர்தல் மேலும் 10 கொம்யூன் பஞ்சாயத்துகளில் உள்ள 98 கிராமப் பஞ்சாயத்துகளின் தலைவர் தேர்தல் மற்றும் 815 கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் அட்டவணையை இப்போது அறிவிக்கின்றது.

இந்த தேர்தல் புதுவை மாநிலத்தில் 3 கட்டங்களாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் கட்ட தேர்தல்</u>

1. காரைக்கால் நகராட்சி
2. மாகி நகராட்சி
3. யானம் நகராட்சி
4. கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து
5. நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து
6. நிரவி கொம்யூன் பஞ்சாயத்து
7. திருமலைராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து
8. திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து

இரண்டாவது கட்ட தேர்தல்

1. புதுச்சேரி நகராட்சி
2. உழவர்கரை நகராட்சி
3. அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து

மூன்றாவது கட்ட தேர்தல்:-

1. பாகூர் கொம்யூன் பஞ்சாயத்து
2. மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து
3. நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்து
4. வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து

தேர்தல் அட்டவணை:

முதல் கட்ட தேர்தல் அட்டவணை:-

| | |
|---|---|
| வேட்பு மனுத் தாக்கல் துவக்கம் | 14-12-2012 |
| வேட்பு மனுத் தாக்கல் கடைசி நாள் | 21-12-2012 |
| வேட்பு மனு பரிசீலனை | 22-12-2012 |
| வேட்பாளர் மனு திரும்பப் பெற கடைசி நாள் | 24-12-2012 |
| தேர்தல் நாள் | 04-01-2013 |

இரண்டாவது கட்ட தேர்தல் அட்டவணை:-

| | |
|---|---|
| வேட்பு மனுத் தாக்கல் துவக்கம் | 17-12-2012 |
| வேட்பு மனுத் தாக்கல் கடைசி நாள் | 24-12-2012 |
| வேட்பு மனு பரிசீலனை | 26-12-2012 |
| வேட்பாளர் மனு திரும்பப் பெற கடைசி நாள் | 28-12-2012 |
| தேர்தல் நாள் | 08-01-2013 |

மூன்றாவது கட்ட தேர்தல் அட்டவணை:-

| | |
|---|---|
| வேட்பு மனுத் தாக்கல் துவக்கம் | 20-12-2012 |
| வேட்பு மனுத் தாக்கல் கடைசி நாள் | 27-12-2012 |
| வேட்பு மனு பரிசீலனை | 28-12-2012 |
| வேட்பாளர் மனு திரும்பப் பெற கடைசி நாள் | 31-12-2012 |
| தேர்தல் நாள் | 10-01-2013 |

மூன்று கட்ட தேர்தல்கள் முடிந்த பின் வாக்கு எண்ணிக்கை 12-01-2013 அன்று நடைபெறும்.

உள்ளாட்சி தேர்தல்களை நடத்துவதற்கு 15 தேர்தல் நடத்தும் அதிகாரிகளும், 75 உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளும் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் புதுவை மாவட்ட ஆட்சியர் புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரியாகவும், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரியாகவும் மாஹி மற்றும் ஏனாம் மண்டல நிர்வாகிகள் அந்தந்த மண்டல தேர்தல் அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சித்தேர்தல் நடத்துவதற்கு 1326 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 7300 அலுவலர்கள் தேர்தல் வேலைகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 8.32 இலட்சம் வாக்காளர்கள், தங்கள் வாக்குகளை அளிக்க உள்ளனர். இதில் 4.88 இலட்சம் வாக்காளர்கள், நகராட்சித் தேர்தல்களிலும், 3.44 இலட்சம் வாக்காளர்கள் பஞ்சாயத்து தேர்தல்களிலும் வாக்களிக்க உள்ளனர்.

தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் இன்று முதல் அமலுக்கு வருகின்றது.

இந்த அறிவிக்கை மற்றும் தேர்தல் சம்மந்தமான நடவடிக்கைகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள மனு எண். W.P.30477/2012-ன் முடிவுகளுக்கு உட்பட்டது.

(உதீப்த ரே)
மாநில தேர்தல் ஆணையர்